## சென்னை மாநகராட்சி – பெருநகர குடிநீர் வழங்கல் – கழிவுநீரகற்று வாரியம் சார்பில்

# 28 திட்டப் பணிகள் திறப்பு - 87 பணிகளுக்கு அடிக்கல்! நல உதவிகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.2.2025) சென்னை ரிப்பன் கட்டடத்தில் நடைபெற்ற விழாவில், பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்து, பணிக்காலத்தில் உயிரிழந்த பணியாளர்களின் குடும்பத்தினருக்கு, கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், திருமதி.தமிழச்சி தங்கபாண்டியன், டாக்டர் கலாநிதி வீராசாமி, டாக்டர் கனிமொழி சோமு, சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், துணை மேயர் மு. மகேஷ் குமார், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர்.டி.ஜி.வினய், மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத்தலைவர்கள், மண்டலக்குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

சென்னை,பிப்.19-

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் , நேற்று முன்தினம் (17.02.2025) ரிப்பன் கட்டட வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் செயல்படும் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீகரற்று வாரியத்தின் சார்பில் பள்ளிக் கட்டடங்கள், விளையாட்டுத் திடல்கள், சமையலறை, பூங்கா, சமுதாய நலக் கூடம், பல்நோக்குக் கட்டடம், கால்பந்து மைதானம், எரிவாயு தகனமேடை, குடிநீர் வழங்கல் மற்றும் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் என மொத்தம் ரூ.449.44 கோடி மதிப்பிட்டில் முடிவுற்ற 28 திட்டப்பணிகள், நாய் பிடிக்கும் வாகனங்கள், மினி டிரக் வாகனங்கள், பாப்காட் வாகனங்கள் என ரூ.13.35 கோடி மதிப்பிலான 58 வாகனங்களை பயன்பாட்டிற்குத் தொடங்கி வைத்தார்.**

இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் பொதுக்கழிப்பறைகள் வடிவமைப்பு, கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, மழைநீர் வடிகால், பாலங்கள், குளங்கள் புனரமைப்பு, திருவான்மியூர் கடற்கரையில் மாற்றுத் திறனாளிகளுக்கான அணுகு பாதை, ஆரம்ப சுகாதார நிலையம், பள்ளிக் கட்டடங்கள், வார்டு அலுவலகக் கட்டடங்கள், பூங்கா, நாய்கள் இனக்கட்டுப்பாட்டு மையங்கள், வெள்ள நிவாரண மையம், மின் மாற்றிகளை சுற்றிலும் பாதுகாப்பு கட்டமைப்புகள், கலை மற்றும் பண்பாட்டு மையம் மற்றும் மயானபூமிகள் என மொத்தம் ரூ.1428,89 கோடி மதிப்பிட்டில் 87 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி பணிகளைத் தொடங்கி வைத்தார்.

மேலும், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்து பணியிடை காலமான பணியாளர்களின் வாரிசுதாரர்களில் 60 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து, சென்னை பள்ளிகளில் 12-ஆம் வகுப்பு படித்து உயர்கல்வி பயிலும் 304 மாணவ, மாணவியருக்கு ரூ.58.50 இலட்சம் மதிப்பில் கல்வி உதவித்தொகையும், 10 மற்றும் 12-ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் 80% மேல் மதிப்பெண் பெற்ற 1004 மாணவ, மாணவியருக்கு ரூ.19.70 இலட்சம் ஊக்கத்தொகையும், சென்னை பள்ளிகளில் 10 மற்றும் 12-ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் முதல் மூன்று இடங்கள் பிடித்த மற்றும் கடந்த ஆண்டை காட்டிலும் தேரச்சி விகிதம் அதிகரித்ததில் முதல் மூன்று இடங்கள் பிடித்த 14 தலைமையாசிரியர்களுக்கு ரூ.62 ஆயிரம் மதிப்பில் ஊக்கத்தொகையும், மாணவ மாணவியர்கள் சிறந்த தேர்ச்சி பெற்றிட சிறப்பாக பயிற்றுவித்து உறுதுணையாக இருந்த 658 ஆசிரியர்களுக்கு ரூ.18.41 இலட்சம் மதிப்பில் ஊக்கத்தொகையும், சென்னை நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயின்று வரும் 175 மாணவியருக்கு ரூ.20.74 இலட்சம் மதிப்பில் தையல் பயிற்சி வழங்குவதற்காக தையல் இயந்திரங்களையும், பெருநகர சென்னை மாநகராட்சியில் தொழிற்பயிற்சி நிறுவனத்தில் (ITI) தற்போது இரண்டாம் ஆண்டு பயின்று வரும் 117 மாணவ, மாணவியருக்கு ரூ.5.72 இலட்சம் மதிப்பில் மிதிவண்டிகள் என மொத்தம் 2,258 சென்னை பள்ளி மாணவர்கள், ஆசிரியர்களுக்கு ரூ.1.24 கோடி மதிப்பில் கல்வி சார்ந்த நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு , மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் , இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு , மேயர் திருமதி ஆர்.பிரியா , நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன் (மத்திய சென்னை) , திருமதி கனிமொழி என். வி. என். சோமு , டாக்டர் கலாநிதி வீராசாமி (வடசென்னை) , திருமதி தமிழச்சி தங்கபாண்டியன் (தென்சென்னை) , சட்டமன்ற உறுப்பினர்கள் இ. பரந்தாமன், எஸ்.சுதர்சனம், ப.சிவகுமார் (எ) தாயகம் கவி, எஸ்.அரவிந்த் ரமேஷ், ஆர்.டி.சேகர், ஐட்ரீம் இரா. மூர்த்தி, அ.வெற்றி அழகன், ஜே.ஜே. எபினேசர், ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, கே.பி.சங்கர், கா.கணபதி, ஜோசப் சாமுவேல், ஜே.எம்.எச். அசன் மௌலானா, மதிப்பிற்குரிய துணை மேயர் மு.மகேஷ்குமார், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், , சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், , மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந.இராமலிங்கம், கூடுதல் ஆணையாளர், இணை/துணை ஆணையாளர்கள், நிலைக்குழுத் தலைவர்கள், மண்டலக்குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### பெருநகர சென்னை மாநகராட்சியால் திறந்து வைக்கப்பட்ட திட்டப்பணிகள்

#### பள்ளிக் கட்டடங்கள்

சிங்கார சென்னை 2.0 மற்றும் நமக்கு நாமே திட்டத்தின் கீழ், திருவொற்றியூர் மண்டலம், வார்டு-7க்குட்பட்ட கார்கில் நகர், வார்டு-14க்குட்பட்ட திருச்சனாங்குப்பம், மணலி மண்டலம், வார்டு-19க்குட்பட்ட மாத்தூர், எம்.எம்.டி.ஏ. 59வது தெரு, தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு-37க்குட்பட்ட பெரம்பூர், எம்.ஜி.ஆர். நகர்-1வது பிரதான சாலை, சூளைமேடு நெடுஞ்சாலை, பெருங்குடி மண்டலம், வார்டு-184க்குட்பட்ட பள்ளி சாலை உள்ளிட்ட சென்னை பள்ளிகளில் ரூ.11.57 கோடி மதிப்பில் முடிவுற்ற 7 பள்ளிக் கட்டடங்கள் மற்றும் ஆய்வகக் கட்டடம்,

சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், வளசரவாக்கம் மண்டலம், வார்டு-144க்குட்பட்ட மதுரவாயல் பாரதியார் தெரு மற்றும் வார்டு-147க்குட்பட்ட தந்தை பெரியார் ஆலப்பாக்கம் பிரதான சாலையில் ரூ.86 இலட்சம் மதிப்பில் 2 விளையாட்டுத் திடல்கள், வார்டு-143க்குட்பட்ட நொளம்பூர், சிவன் கோயில் தெரு சென்னை தொடக்கப் பள்ளியில் ரூ.18 இலட்சம் மதிப்பில் சமையலறை, வார்டு-150க்குட்பட்ட காரம்பாக்கம், காருண்யா நகரில் ரூ.40 இலட்சம் மதிப்பில் பூங்கா, மணலி மண்டலம், வார்டு-15க்குட்பட்ட மணலி புதுநகர் 150 அடி பிரதான சாலை மயானபூமியில் ரூ.1.53 கோடி மதிப்பில் எரிவாயு தகனமேடை கட்டும் பணி, நமக்கு நாமே திட்டத்தின் கீழ், திருவொற்றியூர் மண்டலம், ராமநாதபுரத்தில் ரூ.1.51 கோடி மதிப்பில் சமுதாய நலக் கூடம், வார்டு-7, கார்கில் நகரில் ரூ.45 இலட்சம் மதிப்பில் பல்நோக்குக் கட்டடம், சோழிங்கநல்லூர் மண்டலத்திற்குட்பட்ட அரசு மேல்நிலைப்பள்ளியில் ரூ.1.45 கோடி மதிப்பில் செயற்கை புல் தரை கொண்ட கால்பந்து மைதானம் என மொத்தம் ரூ.17.95 கோடி மதிப்பில் முடிவுற்ற 15 திட்டப்பணிகளை தமிழ்நாடு துணை முதலமைச்சர் இன்று பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

#### கொடியசைத்து தொடங்கி வைக்கப்பட்ட வாகனங்கள்

பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் சாலைகளில் சுற்றித்திரியும் நாய்களை பிடித்து கருத்தடை செய்து வெறிநாய்க்கடி நோய்த் தடுப்பூசி செலுத்துவதற்காக மூலதன நிதியின் கீழ், ரூ.66 இலட்சம் மதிப்பில் கூடுதலாக நாய்கள் பிடிக்கும் 7 வாகனங்கள், போக்குவரத்திற்கு இடையூறாக உள்ள சிறு சிறு ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் மற்றும் அவசர காலங்களில் மீட்புப் பணிகளின் பயன்பாட்டிற்கும் ரூ,1.85 கோடி மதிப்பில் மண்டலத்திற்கு ஒன்று வீதம் 15 எண்ணிக்கையில் இயற்கை எரிவாயு மூலம் இயங்கும் டிப்பர் உடன் கூடிய சிறிய வகை டிரக் வாகனங்கள், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அன்றாடம் சேகரிக்கப்படுகின்ற கட்டிட இடிபாடுகளை உடனுக்குடன் தொய்வின்றி அகற்றிடவும், தெருக்களிலுள்ள மேடு, பள்ளங்களை சமன் செய்யும் பணிக்காகவும் ரூ.10.84 கோடி மதிப்பில் 36 எண்ணிக்கையிலான பாப்காட் வாகனங்கள் என மொத்தம் ரூ.13.35 கோடி மதிப்பில் 58 வாகனங்களை தமிழ்நாடு துணை முதலமைச்சர் இன்று கொடியசைத்து பயன்பாட்டிற்குத் தொடங்கி வைத்தார்.

#### அடிக்கல் நாட்டி தொடங்கி வைக்கப்பட்ட புதிய திட்டப்பணிகள் மழைநீர் வடிகால்கள்

ஆசிய வளர்ச்சி வங்கி நிதியின் கீழ், ரூ.41.74 கோடி மதிப்பில் வி.க.நகர் மண்டலத்தில் உள்ள 129.66 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட பெரிய நீர்ப்பிடிப்புப் பகுதிகளுக்கு டானா தெருவில் 1.80 x 1.80 அளவு 600 மீ நீளத்திற்கும், செல்லப்ப முதலி தெருவில் 2.0 x 2.0 மீ அளவு 600 மீ நீளத்திற்கும், ஸ்ட்ராஹான்ஸ் சாலையில் 2.0 x 2.0 மீ அளவு 100 மீ நீளத்திற்கும், டெமெல்லோஸ் சாலை முதல் முனுசாமி கால்வாய் 3.0 x 3.0 மீ அளவு 650 மீ நீளத்திற்கும், காந்தி கால்வாய் 3.0 x 3.0 மீ அளவு 560 மீ நீளத்திற்கும், யானைகவுனி சாலையிலிருந்து பவுடர் மில்ஸ் சாலைக்கு 650 மீ நீளத்திற்கும், யானைகவுனி சாலையிலிருந்து மூர்மார்க்கெட் கால்வாய்க்கு 2.0 x 2.0 மீ அளவு 650 மீ நீளத்திற்கும் 7 இடங்களில் முழுமையான மழைநீர் வடிகால் வலையமைப்பை உருவாக்குதல்,

மூலதன நிதியின் கீழ், இராயபுரம், வி.க.நகர், அண்ணாநகர், தேனாம்பேட்டை, கோடம்பாக்கம், வளசரவாக்கம், அடையாறு மற்றும் பெருங்குடி ஆகிய 8 மண்டலங்களில் ரூ.70.24 கோடி மதிப்பில் 34 இடங்களில் பழைய மழைநீர் வடிகால்களை இடித்து புதிதாக மழைநீர் வடிகால்கள் மற்றும் விடுபட்ட இடங்களில் மழைநீர் வடிகால்கள் கட்டுதல் என மொத்தம் ரூ.111.98 கோடி மதிப்பில் 41 இடங்களில் புதிய மழைநீர் வடிகால் பணிகள்,

#### குளங்கள் புனரமைப்பு

மூலதன நிதியின் கீழ், மாதவரம், தண்டையார்பேட்டை மற்றும் பெருங்குடி மண்டலங்களிலுள்ள 9 குளங்களை ரூ.16.31 கோடி மதிப்பில் மேம்படுத்தி, புனரமைக்கும் பணிகள்,

மின்மாற்றிகளை சுற்றிலும் பாதுகாப்பு கட்டமைப்புகள் (View Cutter)

VCVT நிதியின் கீழ், திருவொற்றியூர், மணலி, மாதவரம், தண்டையார்பேட்டை மற்றும் அண்ணாநகர் மண்டலங்கள், இராயபுரம் மண்டலத்திற்குட்பட்ட வார்டுகள் 49, 50, 51, 52, 53, 58. 59. 61, 62 மற்றும் 63, வி.க.நகர் மண்டலம், வார்டு-77 மற்றும் 78க்குட்பட்ட பல்வேறு இடங்களில் 9 தொகுப்புகளாக ரூ.32.36 கோடி மதிப்பில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின்மாற்றிகளைச் சுற்றிலும் பாதுகாப்பு மின்கட்டமைப்புகள் (View Cutter) அமைத்தல்

#### 7 இடங்களில் நாய்கள் இனக்கட்டுப்பாட்டு மையங்கள்

மூலதன நிதியின் கீழ், மாதவரம் மண்டலம், வார்டு-25க்குட்பட்ட மாதவரம் சி.எம்.டி.ஏ. டிரக் முனையத்தில் ரூ.1.82 கோடி மதிப்பிலும், அம்பத்தூர் மண்டலம், வார்டு-83க்குட்பட்ட கள்ளிக்குப்பம்-மதனாங்குப்பம் பிரதான சாலையில் ரூ.1.82 கோடி மதிப்பிலும், அண்ணாநகர் மண்டலம், வார்டு-99க்குட்பட்ட பிரிக்ளின் சாலை ஓட்டேரி மயானத்தில் ரூ.1.81 கோடி மதிப்பிலும், திருவொற்றியூர் மண்டலம், வார்டு-7க்குட்பட்ட சாத்தன்காடு எம்.எம்.சி.யில் ரூ.1.83 கோடி மதிப்பிலும், இராயரம் மண்டலம், வார்டு-58க்குட்பட்ட கண்ணப்பர்திடலில் ரூ.1.83 கோடி மதிப்பிலும், வளசரவாக்கம் மண்டலம், வார்டு-143க்குட்பட்ட நொளம்பூர்-யூனியன் சாலையில் ரூ.1.81 கோடி மதிப்பிலும், பெருங்குடி மண்டலம், வார்டு-184க்குட்பட்ட வீரபாண்டி கட்டபொம்மன் குறுக்குத் தெருவில் ரூ.1.60 கோடி மதிப்பில் என மொத்தம் 7 இடங்களில் ரூ.12.52 கோடி மதிப்பில் நாய்கள் இனக் கட்டுப்பாட்டு மையங்கள் கட்டும் பணிகள்,

#### 6 புதிய பாலங்கள்

மூலதன நிதியின் கீழ், தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு-34க்குட்பட்ட கொடுங்கையூர் கால்வாயின் குறுக்கே உள்ள தண்டையார்பேட்டை மற்றும் கடும்பாடி அம்மன் கோயில் தெருவை இணைக்கும் பாலத்தை இடித்துவிட்டு ரூ.7.67 கோடி மதிப்பிலும், அண்ணாநகர் மண்டலம், வார்டு-106க்குட்பட்ட விருகம்பாக்கம் கால்வாயின் குறுக்கே தமிழர் வீதியில் தற்போதுள்ள பாலத்தை இடித்துவிட்டு ரூ.4.98 கோடி மதிப்பிலும், விருகம்பாக்கம் கால்வாயின் குறுக்கே கோ.சு.மணி சாலையில் தற்போதுள்ள பாலத்தை இடித்து விட்டு ரூ.5 கோடி மதிப்பிலும், விருகம்பாக்கம் கால்வாயின் குறுக்கே காமராஜர் நகர் 3வது தெருவில் தற்போதுள்ள பாலத்தை இடித்துவிட்டு ரூ,5 கோடி மதிப்பிலும், வார்டு-105க்குட்பட்ட விருகம்பாக்கம் கால்வாயின் குறுக்கே திருக்குமரபுரத்தில் தற்போதுள்ள பாலத்தை இடித்துவிட்டு ரூ.5 கோடி மதிப்பிலும், வி.க.நகர் மண்டலம், வார்டு-73க்குட்பட்ட ஓட்டேரி கால்வாயின் குறுக்கே நியூ பெரான்ஸ் சாலையில் தற்போதுள்ள பாலத்தை இடித்து விட்டு ரூ.9 கோடி மதிப்பில் புதிய பாலம் என மொத்தம் ரூ.36.65 கோடி மதிப்பில் 6 புதிய பாலங்கள்,

#### மயானபூமிகள் மேம்பாடு

மூலதன நிதியின் கீழ், மணலி மண்டலம், வார்டு-15க்குட்பட்ட மணலி நியூடவுன் 150 அடி சாலை இந்து மயானபூமியில் ரூ.61 இலட்சம் மதிப்பிலும், தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு-34க்குட்பட்ட சீதாராம் நகர் மயானபூமியில் ரூ.64 இலட்சம் மதிப்பிலும், அம்பத்தூர் மண்டலம், வார்டு79க்குட்பட்ட ஒரகடம் மயானபூமியில் ரூ.98 இலட்சம் மதிப்பிலும் என மொத்தம் ரூ.2.23 கோடி மதிப்பில் 3 மயானபூமிகளை மேம்படுத்தும் பணிகள்,

#### பள்ளிக் கட்டடங்கள்

மூலதன நிதியின் கீழ், மணலி மண்டலம், வார்டு-15க்குட்பட்ட மணலி புதுநகர் அரசு உயர்நிலைப்பள்ளியில் ரூ,1.74 கோடி மதிப்பில் 6 வகுப்பறைகளுடன் கூடிய தரைத்தளம் மற்றும் முதல்தளத்துடன் கூடிய பள்ளிக் கட்டடம், மாதவரம் மண்டலம், வார்டு-26க்குட்பட்ட மாதவரம் பால்பண்ணை சென்னை நடுநிலைப் பள்ளியில் ரூ,1.93 கோடி மதிப்பில் வகுப்பறைகள் கட்டும் பணி என மொத்தம் ரூ.3.67 கோடி மதிப்பில் 2 பள்ளிக் கட்டடங்கள்,

#### பொதுக் கழிப்பறைகள் வடிவமைப்பு கட்டுமானம் (ம) பராமரிப்புப் பணி

மூலதன நிதியின் கீழ், ரூ.362.59 கோடி மதிப்பில் திருவொற்றியூர், மணலி, மாதவரம் மற்றும் தண்டையார்பேட்டை மண்டலங்களில் உள்ள 285 பொதுக் கழிப்பறைகள், ரூ.455.42 கோடி மதிப்பில் அம்பத்தூர், அண்ணாநகர், தேனாம்பேட்டை மற்றும் கோடம்பாக்கம் மண்டலங்களில் உள்ள 395 பொதுக் கழிப்பறைகள், ரூ.383.97 கோடி மதிப்பில் வளசரவாக்கம், ஆலந்தூர், அடையாறு, பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் மண்டலங்களில் உள்ள 322 பொதுக் கழிப்பறைகள் என 3 தொகுப்புகளாக ரூ.1,201.98 கோடி மதிப்பில் 1002 பொதுக்கழிப்பறைகள் வடிவமைப்பு, கட்டுமானம், நிதி, இயக்குதல் மற்றும் மாற்றும் பணிகள்,

#### வார்டு அலுவலகக் கட்டடங்கள்

மூலதன நிதியின் கீழ், மணலி மண்டலம், வார்டு-22க்குட்பட்ட தேவராஜன் தெருவில் ரூ.98 இலட்சம் மதிப்பிலும், வளசரவாக்கம் மண்டலம், வார்டு-153க்குட்பட்ட சக்தி நகர் பிரதான சாலையில் ரூ.2.05 கோடி மதிப்பிலும் என ரூ.3.03 கோடி மதிப்பில் 2 அலுவலகக் கட்டடங்கள்,

மூலதன நிதியின் கீழ், அடையாறு மண்டலம், வார்டு-180, திருவான்மியூர் கடற்கரையில் மாற்றுத்திறனாளிகள் கடல் அலையைக் கண்டு மகிழ்ந்திடும் வகையில் ரூ.1.21 கோடி மதிப்பில் அணுகு பாதை, தேனாம்பேட்டை மண்டலம், வார்டு-114, அருணாச்சலம் தெருவில் ரூ.1.20 கோடி மதிப்பில் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம், மணலி மண்டலம், வார்டு-17, கொசப்பூர் செட்டி மேட்டில் ரூ.1.80 கோடி மதிப்பில் வெள்ள நிவாரண மையக் கட்டடம், தேனாம்பேட்டை மண்டலம், வார்டு-123, லஸ் அவென்யூ, 5வது தெருவில் ரூ.1.95 கோடி மதிப்பில் கலை மற்றும் பண்பாட்டு வளாகக் கட்டடம், வளசரவாக்கம் மண்டலம், வார்டு-145, மாதா கோவில் தெருவில் ரூ.2 கோடி மதிப்பில் புதிய பூங்கா என மொத்தம் ரூ.1428.89 கோடி மதிப்பிலான 87 புதிய திட்டப்பணிகளுக்கு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அடிக்கல் நாட்டி பணிகளைத் தொடங்கி வைத்தார்.

### சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்

சோழிங்கநல்லூர் மண்டலம், ஓ.எம்.ஆர். சாலையிலிருந்து பெரும்பாக்கம் வடக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பில் உள்ள 30 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட கீழ்நிலை நீர்தேக்கத் தொட்டிக்கு ரூ.8.16 கோடி மதிப்பில் 400 மி.மீ. விட்டமுள்ள பிரத்யேக நெகிழிரும்பு குடிநீர் குழாய் அமைக்கும் திட்டம், 15 மண்டலங்களில் உள்ள பகுதிகளில் ரூ-25 இலட்சம் மதிப்பில் இணையவழி (Online) மூலம் எளிதாக்கப்பட்ட புதிய குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பு, விரிவாக்கப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் பொதுமக்கள் தங்களுடைய வீடுகளில் உள்ள கழிவுநீர் தொட்டியை சுத்தம் செய்ய கழிவு நீர் ஊர்தியை பதிவு செய்வதற்கு ரூ.27 இலட்சம் மதிப்பில் கைபேசி செயலி, அம்பத்தூர் மண்டலம், வார்டுகள் 84, 85 மற்றும் 86க்குட்பட்ட படவட்டம்மன் எஸ்டேட், சிவானந்தா நகர், எம்.கே.பி. நகர், அன்னை சத்தியா நகர் பகுதிகளில் உள்ள விடுபட்ட தெருக்களுக்கு ரூ,21.01 கோடி மதிப்பில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம்,

கோடம்பாக்கம் மண்டலம், வார்டு-130, பிள்ளையார் கோயில் தெருவில் ரூ.4.28 கோடி மதிப்பில் கழிவுநீர் உந்து நிலையம் மற்றும் பக்தவச்சலம் காலனி 1வது தெரு, கங்கை அம்மன் காலனி 2வது தெருவில் கழிவுநீர் குழாய்களை பெரிதுபடுத்தும் பணிகள், வார்டு- 133, 134 மற்றும் 135க்குட்பட்ட கோடம்பாக்கம் மற்றும் மேற்கு மாம்பலம் பகுதிகளில் ரூ.3.26 கோடி மதிப்பில் கழிவுநீர் குழாய்களை பெரிது படுத்தும் பணிகள், வார்டு-137, சூளைப்பள்ளம் - எம்.ஜி.ஆர் நகர் பகுதிகளில் உள்ள விடுபட்ட தெருக்களுக்கு ரூ.6.65 கோடி மதிப்பில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம், வார்டு-138, ஜாபர்கான்பேட்டை பகுதியில் ரூ.2.20 கோடி மதிப்பில் சத்தியமூர்த்தி பிளாக் நீரேற்று நிலையத்தின் உந்து குழாய் தரம் உயர்த்தி புதுப்பிக்கும் பணிகள்,

கோயம்பேட்டில் நாளொன்றுக்கு 60 மற்றும் 120 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை ரூ.49.37 கோடி மதிப்பில் புதிய தரக்குறியீடுகளுக்காக புதுப்பித்தல், புனரமைத்தல், மேம்படுத்தும் பணிகள், ஆலந்தூர் மண்டலம், வார்டு-158, நந்தம்பாக்கம் பகுதியில் ரூ.26.94 கோடி மதிப்பில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம், மடிப்பாக்கம் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ், பெருங்குடி மண்டலம், வார்டு - 187 மற்றும் 188க்குட்பட்ட ராம் நகர், ராஜலட்சுமி நகர், சதாசிவ நகர் மற்றும் லேக் வியூ சாலை பகுதிகளில் ரூ.171.70 கோடி மதிப்பில் கழிவுநீர் குழாய்கள், கழிவுநீர் விசை குழாய்கள் மற்றும் கழிவுநீரிறைக்கும் நிலையம் அமைக்கும் திட்டம்,

பெருங்குடியில் நாளொன்றுக்கு 60 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட தொடர் தொகுதி முறையில் ரூ.88.94 கோடி மதிப்பில் உயிரி எரிவாயுவின் மூலம் மின் உற்பத்தி செய்யும் புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், பெருங்குடியில் நாளொன்றுக்கு 54 மற்றும் 60 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் ரூ.48.46 கோடி மதிப்பில் புதிய தரக்குறியீடுகளுக்காக புதுப்பித்தல், புனரமைத்தல், மேம்படுத்தும் பணிகள் என மொத்தம் ரூ.431.49 கோடி மதிப்பில் முடிவுற்ற 13 திட்டப்பணிகளை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.